**செய்தி வெளியீடு எண்: 92** **நாள்: 27.01.2012**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், 30.12.2011 அன்று தமிழகத்தை தாக்கிய 'தானே' புயலால் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (27.1.2012) தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு. நத்தம் ஆர். விஸ்வநாதன் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின்தொடர் அமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக 8 கோடி ரூபாய் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் சார்பாக 7 கோடி ரூபாய், என மொத்தம் 15 கோடி ரூபாய்.
2. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் நகராட்சி நிர்வாகத்தின் சார்பாக 3 கோடியே 33 லட்சத்து 6 ஆயிரத்து 142 ரூபாய் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக 1 கோடியே 65 லட்சத்து 7 ஆயிரத்து 37 ரூபாய், என மொத்தம் 4 கோடியே 98 லட்சத்து 13 ஆயிரத்து 179 ரூபாய் வழங்கினார்கள்.
3. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள் கூட்டுறவுத்துறை மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவன ஊழியர்களின் ஒரு நாள் சம்பளம் 5 கோடியே 59 லட்சம் ரூபாய் வழங்கினார்கள்.
4. கோயம்புத்தூர் மாநகராட்சி ஊழியர்களின் ஒரு நாள் ஊதியம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திரு.செ.ம. வேலுச்சாமி அவர்களின் சொந்த பங்களிப்பான 5 லட்சம் ரூபாயுடன் சேர்த்து, மொத்தம் 27 லட்சத்து 44 ஆயிரத்து 733 ரூபாய் வழங்கினார்கள்.
5. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் ஒரு நாள் ஊதியம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தரும் செட்டிநாடு குழுமத்தின் தலைவருமான திரு.எம்.ஏ.எம்.இராமசாமி அவர்களின் சொந்த பங்களிப்பான 1 கோடி ரூபாயும் சேர்த்து மொத்தம் – 2 கோடியே 8 ஆயிரம் ரூபாய் வழங்கினார்கள்.
6. வி.ஜி.பி. குழுமத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி. சந்தோசம் – 10 லட்சம் ரூபாய்
7. திரைப்பட நடிகர் திரு. ரஜினிகாந்த் – 10 லட்சம் ரூபாய்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக 28 கோடியே 4 லட்சத்து 65 ஆயிரத்து 912 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (27.1.2012) அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 52 கோடியே 41 லட்சத்து 89 ஆயிரத்து 451 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 27.1.2012